

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 30-11-2024


# குலத்தொழிலை ஊக்குவிக்கலாமா?

'திராவிட மாடல்' ஆட்சியின் கொள்கை முடிவை மிக அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

"பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதால், தற்போதைய வடிவில் அதனைச் செயல்படுத்திட இயலாது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 1950 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் குலக் கல்வி முறையைக் கொண்டுவந்து - அதன்மூலமாக மக்களின் எதிர்ப்பைச் சந்தித்து பதவியைவிட்டு விலகினார் இராஜாஜி. 75 ஆண்டுகள் கழித்து அதேபோன்றதொரு திட்டத்தை எடுத்து வருகிறார் பிரதமர் மோடி.

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் 4-1-2024 நாளன்று பிரதமர் மோடி அவர்களுக்குமாண்புமிகுமுதலமைச்சர்அவர்கள்கடிதம்எழுதினார்கள். மீண்டும் இதே போன்ற ஒரு கடிதத்தை ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சிக்கு எழுதி உள்ளார்கள். இந்தத் திட்டத்தின் அநீதியான விளைவுகளைப் பட்டியலிட்டுக் காட்டி இருக்கிறார்.

ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில்முறையை வலுப்படுத்தும் என்பதைக் கருத்தில்கொண்டு, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு குழு அமைத்தார் முதலமைச்சர் அவர்கள். "விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக, வழிகாட்டுதல்களில் பட்டியலிடப் பட்டுள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவிபெறத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்" என்று அக்குழு பரிந்துரை செய்தது. இதனை ஒன்றிய அரசுக்கும் தமிழ்நாடு அரசு சொல்லியது. ஆனால் ஒன்றிய அரசு இத்திருத்தத்தை ஏற்கவில்லை.

"பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவில் செயல்படுத்துவதை தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செல்லாது. இருப்பினும், சமூக நீதி என்ற ஒட்டுமொத்தக் கொள்கையின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தவிருக்கும் இந்தத் திட்டம், சாதி மற்றும் குடும்பத் தொழில் வேறுபாடின்றி, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும். இத்தகைய திட்டம், அவர்களுக்கு நிதி உதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் விரிவாக உள்ளடக்கியதாக இருக்கும்" என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

2023 ஆகஸ்ட் 15 செங்கோட்டையில் கொடியேற்றி வைத்து விட்டு உரையாற்றிய பிரதமர் மோடி, இந்த ஜாதித் தொழில் கொடியையும் ஏற்றி வைத்தார்.

'குலத்தொழிலைச் செய்பவர்கள் தங்களது குடும்பத் தொழிலைத் தொடர்ந்து செய்தால் நிதி கொடுப்போம்' என்று அறிவித்தார். அவர்களது பரம்பரைத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாக குலத் தொழிலை ஊக்குவிக்கிறது. பரம்பரையாகத் தொழில்செய்பவர்களுக்குக்கடனுதவி வழங்கும் திட்டமாக இதனை அறிவித்தார்.

'பரம்பரைத் தொழில் செய்பவர்கள்' என்றால் அனைத்துத் தொழில்களையும் சொல்லி இருக்க வேண்டும். 18 தொழில்களைமட்டும் பிரித்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் சேர்பவர்கள் பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். செருப்புத் தைப்பவர் பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலைச் செய்து வருகிறேன் எனச் சான்றிதழ் வாங்கி வர வேண்டும். இந்தத் தொழிலாளி ஒருவர் தனது தொழிலை விரிவுபடுத்தி, வேறு ஒரு பொருளை தயாரித்தால் அவருக்கு நிதி உதவி கிடையாது. 'பி.எம். விஸ்வகர்மா' என்ற திட்டத்தை 16.8.2023 அன்று அமைச்சரவையின் பொருளாதாரக் குழு ஏற்று 13 ஆயிரம் கோடி பணத்தையும் ஒதுக்கியது. 2023 முதல் 2028 வரை குலத் தொழில் செய்ய வாரிசுகளுக்கு அவர்களது குடும்பத்தினர் கற்றுக் கொடுப்பார்களாம்.

தச்சர், படகு தயாரிப்பாளர், கவசம் தயாரிப்பவர், கொல்லர், சுத்தியல் மற்றும் கருவிகள் தயாரிப்பவர், பூட்டு தயாரிப்பவர், பொற்கொல்லர், குயவர், சிற்பி, காலணி தயாரிப்பவர், கொத்தனார், கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர், பொம்மை தயாரிப்பவர், முடி திருத்துபவர், பூமாலை தொடுப்பவர், சலவைத் தொழிலாளர், தையலர், மீன்பிடி வலை தயாரிப்பவர் ஆகியோருக்கு மானியத்தில் கடன் கொடுக்கும் திட்டம் இது.

**இத்தொழிலாளர்க்கு, தொழிலுக்கு, தொழில் செய்பவருக்கான திட்டம் அல்ல இது. இத்தொழிலை பரம்பரை பரம்பரையாகச் செய்து வர வேண்டும். இந்தத் தொழில் தவிர வேறு தொழிலுக்கு மாறக் கூடாது. இந்தத் தொழிலை திடீரென செய்யக் கூடாது. 'பரம்பரை பரம்பரையாக' என்றால், குறிப்பிட்ட சமூகத்தினர் செய்வது தானே இதுவரை வழக்கமாக இருந்துள்ளது. அவர்களையே செய்யக் கட்டாயப்படுத்தும் 'ஜாதியை நிலைநிறுத்தும்' திட்டம் தான் இது!**

**'அவரவர் ஜாதிக் குலத் தொழிலை, பரம்பரைத் தொழிலைத்தான் அவரவர் செய்ய வேண்டும்' என்கிறது பா.ஜ.க. அரசு. 'தொழிலைக் கற்றுத் தருகிறோம், அந்தத் தொழிலைத்தான் தொடர வேண்டும்' என்ற திட்டத்துக்கு உள்ளாக, சாதியைக் கெட்டிப்படுத்தும் தந்திரம் இருக்கிறது. சாதியை வலிமைப்படுத்தவே திட்டம் போடுகிறார்கள்; பணமும் ஒதுக்குகிறார்கள்.**

**குலநீதி பேசும், வலியுறுத்தும் எண்ணத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு கைவிடவேண்டும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சந்தித்து, புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற 43வது இந்திய, பன்னாட்டு வர்த்தக கண்காட்சியின் "2047ல் இந்தியா" என்ற கருப்பொருள் விளக்கக் காட்சிப்படுத்தலை சிறப்பாக அமைத்ததற்காக தமிழ்நாடு மாநில அரங்கிற்கு வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

## 'கவிப்பேரரசு வைரமுத்து படைப்புலகம்' பன்னாட்டுக் கருத்தரங்கம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு!

## நேரில் சந்தித்து வைரமுத்து வழங்கினார்!

சென்னை, நவ.30-

கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைக்கு வயது 52. அவரது திரைப்பாட்டுக்கு வயது 44. இதுவரை 39 நூல்கள் எழுதியிருக்கிறார். சாகித்ய அகாடமி விருதுபெற்ற இவரது கள்ளிக்காட்டு இதிகாசம் 10 இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது; மேலும் 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்காக 7 ஜனாதிபதிகளிடம் விருது பெற்றிருக்கிறார். இவரது படைப்புகளை ஆராய்ச்சி செய்து இதுவரை 180 பேர் டாக்டர் பட்டமும், எம்.பில் பட்டமும் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் இவர் பெற்றிருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து படைப்புகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் நடைபெறுகிறது. உலகெங்கிலுமிருந்தும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கிறார்கள். கருத்தரங்கம் முழுநாள் நிகழவிருக்கிறது. மாலையில் நிகழும் நிறைவுவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கவிப்பேரரசு வைரமுத்து நேரில் சென்று அழைப்பு விடுத்தார்.

## சொத்து வரி உயர்வுக்குக் காரணமான எடப்பாடி பழனிசாமி

# அ.தி.மு.க. கலவர ஆய்வை திசை திருப்ப நீலிக்கண்ணீர் வடிக்கிறார்!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கடும் கண்டனம்!

**சென்னை, நவ.30-**

**"சொத்து வரி உயர்வுக்குக் காரணமான எடப்பாடி பழனிசாமி தனது கட்சியான அ.தி.மு.க. கலவர ஆய்வை திசை திருப்ப நீலிக்கண்ணீர் வடிக்கிறார்" என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

**இது குறித்து அமைச்சர் கே.என். நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



திருப்பூர் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் சொத்துவரி திருத்த தீர்மானத்திற்கு எதிராக அ.தி.மு.க. போராட்ட நாடகத்தை நடத்தி உள்ளது. மாநிலங்களின் உள்ளாட்சி அமைப்புகள் கட்டாயம் சொத்து வரியினை ஆண்டுதோறும் உயர்த்தியே ஆக வேண்டும் என ஒன்றிய அரசு நிபந்தனை விதித்தபோது வாய்மூடி அமைதியாய் இருந்த பழனிச்சாமி இன்று திடீரென மக்கள் மீது அக்கறை கொண்டவராய் வேடம் போடுவது வேடிக்கை.

ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15ஆவது நிதி ஆணையம் தனது அறிக்கையில், 2022-2023-ஆம் ஆண்டுமுதல் உள்ளாட்சி அமைப்புகள் மானியம் பெறுவதற்கான தகுதியைப் பெறும் பொருட்டு 2021-22-ஆம் ஆண்டில் சொத்துவரி தள வீதங்களை (Floor rates) அறிவிக்கை செய்ய வேண்டும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு "ஆண்டுதோறும் சொத்துவரி வீதத்தை உயர்த்திட வேண்டும்" என நிபந்தனைகளை விதித்துள்ளது'. அதேபோல ஒன்றிய அரசின் 'தூய்மை இந்தியா திட்டம்' மற்றும் அம்ரூட் 2.0 ஆகியவற்றுக்கும் இதே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஒருவேளை தமிழ்நாடு அரசு இதை கடைப்பிடிக்காத பட்சத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021-26 வரை நமக்கு கொடுக்கப்பட வேண்டிய ஒன்றிய அரசின் மானியம் ரூ.4,36,361 கோடி நிறுத்தி வைக்கப்படும், அதோடு தூய்மை இந்தியா திட்டம், அம்ரூட் 2.0 திட்டம் ஆகியவற்றிற்கான நிதியும் ஒதுக்கப்படாது.

### முழுப்பூசணியை சோற்றில் மறைப்பதா?

ஒன்றிய அரசு இப்படி கடுமையான விதிகளை 15-வது நிதியாணையத்தின் மூலம் விதித்தபோது அவர்களோடு நட்புறவில் இருந்தவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. தற்போது தமிழ்நாடு அரசு தான் சொத்து வரி உயர்வுக்கு காரணம் என்று சொல்வது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஊழல் செய்து உள்ளாட்சி அமைப்புகளை எல்லாம் திவாலாக்கிய எடப்பாடி பழனிச்சாமி அரசியல் ஆதாயத்திற்காகவும் தங்கள் கட்சியின் கலவர ஆய்வுக் களேபரங்களை மறைத்து திசை திருப்பவும் மக்கள் மீது அக்கறை உள்ளதைப் போல நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்.

15வது நிதியாணையம் சொத்து வரி உயர்வைக் கட்டாயமாக்கியதன் காரணமாக வேறுவழியின்றி, தமிழ்நாட்டு மக்கள் மீது மாறா அன்பும் அக்கறையும் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் மிக மிக குறைந்த அளவு சொத்து வரியினை உயர்த்த உத்தரவிட்டார்.

அந்த வகையில் ஏழை எளிய நடுத்தர மக்கள் அதிகம் பாதிக்கப்படாத வகையில் குடியிருப்புகளின் பரப்பளவை 4 வகைகளாக பிரித்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் சொத்து வரியானது மிக மிக குறைந்தளவே விதிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பரந்தூர் - ஓசூரில் பசுமை விமான நிலையம் - எடுத்த நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி

*புதுடெல்லி, நவ. 30 -*

*பரந்தூர் - ஓசூர் பசுமை விமான நிலையம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.*

*தமிழ்நாட்டில் பரந்தூர் மற்றும் ஓசூரில் பசுமை விமான நிலையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த நடவடிக்கைகளின் விவரம் தொடர்பாக மாநிலங்களவை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு சிவில் விமான போக்குவரத்து இணை மந்திரி முரளிதர் மொகல் அளித்த எழுத்துப்பூர்வ பதிலில், ஓசூர் விமான நிலையத்துக்கு பாதுகாப்பு அமைச்சகம் தடையில்லா சான்று வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.*

*அந்த பதிலின் விரிவான விவரம் வருமாறு:*



*காஞ்சீபுரம் மாவட்டம் பரந்தூரில் பசுமை விமான நிலையம் அமைப்பதற்கான தள அனுமதியைப் பெற சிவில் விமான போக்குவரத்துத்துறையிடம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (டிட்கோ) விண்ணப்பித்து இருந்தது. இதன்பேரில் கடந்த ஆகஸ்டு மாதம் தள அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொள்கை ஒப்புதலுக்கான விண்ணப்பம் டிட்கோ விடம் இருந்து பெறப்பட்டு இருக்கிறது.*

*ஓசூரில் பசுமை விமான நிலையத்துக்காக முன்மொழியப்பட்ட 4 தளங்களை விமான நிலைய ஆணைய அதிகாரிகள் மற்றும் டிட்கோ அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த செப்டம்பர் மாதம் ஆய்வு செய்தது. அந்த பகுதியில் விமானப்படை மையம் இருப்பதை கருத்தில் கொண்டு பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளுடன் கலந்து பேசப்பட்டது. பாதுகாப்பு அமைச்சகம் தள அனுமதியை வழங்க நிபந்தனை களுடன் தடையில்லா சான்று வழங்கி இருக்கிறது.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.*